2013 மார்ச் 25]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே காய்கறிகளின் வரத்து எவ்வளவு இருக்கிறது என்பதை அறிந்து, தேவை இருப்பின், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

சொந்தக் கட்டடம்

***1170—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தற்போது ரூ.2,000 மாத வாடகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, அரசு நிலம் அல்லது புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித் தர மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அடிமனை ஒதுக்கீடு செய்யப்பட்டபின், இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி சிங்களாந்தி, நெடுமடம், தேவமாள்பட்டினம், திருத்துறைப்பூண்டி நகரம் ஆகிய நான்கு வருவாய்க் கிராமங்களுக்குச் சொந்தமான 3,362 உறுப்பினர்கள் கொண்ட மிகப் பெரிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாகும். இந்த வங்கிக்கு கட்டடம் கட்டுவதற்கு கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னால் 33 சென்ட் இடம் வாங்கப்பட்டிருக்கிறது. அந்த இடம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் இருக்கிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமான இடத்தில் சுற்றுச்சுவர் எழுப்பியதால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் செல்ல வழி இல்லாத காரணத்தினாலே, அந்தக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திலிருந்து சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் செல்லக்கூடிய அந்தப் பாதைக்கு ஏற்பாடு செய்தால், அந்தக் கட்டடத்தைக் கட்ட முடியும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், 33 சென்ட் இடம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு உரிய இடம் இருக்கிறது. அந்த இடம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் இருப்பதனால், அங்கு சென்று வருவதற்குப் பாதை இல்லை என்பதை நீங்களே சொல்லிவிட்டீர்கள். அதற்குள் இருப்பதனால், அதை மாற்றிக் கொடுப்பதற்கோ அல்லது அந்த இடத்தைக் கிரயம் செய்வதற்கோ ஆணையாளருடைய ஒப்புதல் தேவை. ஆனால், அமைச்சருக்கோ அல்லது ஆணையாளருக்கோ அதிகாரம் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய தனி அலுவலர் பிறிதொரு அரசு இடம் கொடுப்பதற்கு நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடம்

2013 மார்ச் 25]

அனுமதி கேட்டிருக்கிறார். அரசு இடமோ அல்லது அரசு புறம்போக்கு இடமோ கிடைத்தபின், உடனடியாகக் கட்டடம் கட்டிக்கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்குச் சொந்தமான இடத்தில், அவர்கள் காம்பவுண்ட் சுவர் கட்டியிருக்கின்றார்கள். சிங்களாந்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டடம் கட்ட வாங்கிய இடம் அதற்கு அருகில் இருக்கிறது. ஆகவே, இந்தப் பாதையை அவர்கள் கொடுப்பார்களேயானால், நிச்சயமாகக் கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இல்லமே அந்தச் சங்கத்திற்கு எதிரே இருக்கிறது. எனவே, அவரே முயற்சி எடுத்து, அரசினுடைய அனுமதியோடு, ஆணையாளருடைய அனுமதியைப் பெற்றுத் தந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு தகவல். அதி விரைவிலே மாவட்ட ஆட்சியர் இடம் கொடுப்பதாகக் கூறி இருக்கின்றார். இது போன்று பல்வேறு இடங்களில், இடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற அத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் நம்முடைய பதிவாளர் அவர்கள் இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி இருக்கின்றார்கள். எனவே, இடங்கள் கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.